இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்

---

*[1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1988 நவம்பர் மாதம் 25 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.15

**1988 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம்**

**[1988 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24 ஆம் தேதியன்று அத்தாட்சிப் படுத்தப்பட்டது]**

ச. வ.—ஓ 49/83அ
1632

**1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப்பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.*

1. இச்சட்டம், 1988 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

*1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1982 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, இலங்கைத் தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் 7 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், அந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஆஆ) தொலைக்காட்சி வாங்கு கருவிகளை இறக்குமதி செய்கின்ற, விற்பனைசெய்கின்ற, உற்பத்தி செய்கின்ற அல்லது பொருத்தியிணைக்கின்ற தொழிலைக்கொண்டு நடாத்துகின்ற ஆட்களைப் பதிவுசெய்தல்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (க), (ங) என்னும் பந்திகளுக்குப் பதிலாகப் பின்வரும் பந்திகளை இடுவதன் மூலம் :—

"(க) தொலைக்காட்சி ஒலிபரப்புத் திறமையை அபிவிருத்தி செய்து சீராக்கும் நோக்கத்துக்காக சமுதாய நலனுக்குகந்தவை எனக் கூட்டுத்தாபனம் கருதும் அத்தகைய எல்லாக் காரியங்களையும் செய்தல் ;

(ங) மேற்சொல்லப்பட்ட நோக்கங்களுள் எவற்றுக்காகவேனும் இலங்கையிலாயினுஞ் சரி அல்லது வேறு எந்த இடத்திலாயினுஞ் சரி உள்ள எவரேனும் ஆளுடன் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஏதேனும் ஆட்கள் குழுவுடன் சேர்ந்து அல்லது இணைந்து செயலாற்றுதல் ;";

2—டீ 000962—3,050 (11/88)

(2) அந்த உட்பிரிவின் (ஞ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளைச் சேர்ப்பதன்மூலம் :—

" (ச) இச்சட்டத்தின் IV அ எனும் பாகத்தின்கீழ் தொலைக்காட்சி வாங்கு கருவிகளை உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்குமான உரிமங்களை வழங்குதலும் புதிப்பித்தலும், அத்தகைய உரிமங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்கும் முகவர்களை நியமித்தலும் அத்துடன் அத்தகைய உரிமங்கள் பெற்றுக்கொள்ளப்படுவதனை அல்லது புதுப்பிக்கப்படுவதனை உறுதி செய்தலும் ;

(ஞ) தொலைக்காட்சி வாங்குகருவிகளை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், உற்பத்திசெய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் தொடர்பிலான தகவலையும் விவரத்திரட்டுகளையும், அத்தகைய இறக்குமதிசெய்தல், விற்பனைசெய்தல், உற்பத்திசெய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்பவற்றில் ஈடுபட்டுள்ள எல்லா ஆட்களிடமிருந்தும் கோருதலும். ".

*முதன்மைச் சட்டவாக்கத்தில் 8அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அந்தச் சட்டவாக்கத்தின் 8அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

" *முகவர்களை நியமித்தல்.* 8அ. கூட்டுத்தாபனமானது, இச்சட்டத்தின் IVஅ என்னும் பாகத்தின்கீழ் உரிமங்களை வழங்குதல், புதுப்பித்தல் என்னும் நோக்கங்களுக்காக, எவரேனும் ஆளை அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவைக் கூட்டுத்தாபனத்தின் முகவர் ஒருவராக இருப்பதற்கெனக் காலத்திற்குக்காலம் நியமிக்கலாமென்பதுடன், கூட்டுத்தாபனத்திற்கும் அத்தகைய முகவருக்குமிடையே உடன்பட்டுக்கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியத்தை அத்தகைய முகவருக்குக் கொடுக்கலாம்.".

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவானது அப்பிரிவின் 1 ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அந்த உட்பிரிவின் (இ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலம் :—

" (இஇ) 30அ என்னும் பிரிவின்கீழ் நிதியத்திற்கு வரவு வைக்கப்படக்கூடியவாறான அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும் ;" ;

(2) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

" (ஈ) தொலைக்காட்சி உரிமங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்கும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் கலந்தாலோசனையுடன் அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாக ஆண்டுதோறும் பெற்றுக் கொள்ளப்படும் கட்டணங்களின் அத்தகைய பாகம் ;";

(3) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலம் :—

" (ஈஈ) இச்சட்டத்தின் அ என்னும் பாகத்தின்கீழ் பதிவுச் சான்றிதழ்களை வழங்குவதற்காக ஆண்டுதோறும் பெறப்படும் அத்தகைய எல்லாப் பணத்தொகைகளும்; அத்துடன் "

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய IV அ என்னும் பாகத்தை உட்புகுத்துதல்

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் IV ஆம் பாகத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய பாகம் இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், அது அந்தச் சட்டவாக்கத்தின் IV அ என்னும் பாகமாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"பாகம் IV அ

உரிமங்களை வழங்குதலும் பதிவுசெய்தலும்

தொலைக் காட்சி வாங்கு கருவிகளை உடைமையில் வைத்திருப்பதன் மீதும், அவற்றின் பயன்பாட்டின் மீதுமான தடை.

16அ. (1) இயைபான தேதியன்று அல்லது அதற்குப் பின்னர், ஆளெவரும், கூட்டுத்தாபனத்தால் அதற்கென வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழ் தவிர, தொலைக்காட்சி வாங்கு கருவி எதனையும் உடைமையில் வைத்திருத்தலோ அல்லது பயன்படுத்துதலோ ஆகாது.

(2) (1) ஆம் உட்பிரிவின் தேவைப்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதலாகாது :—

(அ) இப்பிரிவின் நோக்கங்களுக்காக கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சர் குறித்துரைக்கக்கூடியதான பாடசாலையொன்றில், உயர் கல்வி நிறுவனமொன்றில் அல்லது வேறு நிறுவனத்தில் சமுதாயத்திற்கு நன்மை பயக்கும் சமூக அல்லது கல்விசார் கற்கைகள் அத்தகைய நிறுவனத்தில் கொண்டுநடாத்தப்படுகின்றனவென்ற நிகழ்வைக் கருத்தில் கொண்டு, அத்தகைய நிறுவனத்தில் எவரேனும் ஆளினால் தொலைக்காட்சி வாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும் ;

(ஆ) இச்சட்டத்தின் 16க என்னும் பிரிவின்கீழ் பதிவுசெய்யப்பட்டும் அத்துடன் அப்பிரிவின் கீழ் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழை வைத்திருப்பவராயும் உள்ளவரான தொலைக்காட்சி வாங்கு கருவிகளின் எவரேனும் இறக்குமதியாளர், விற்பனையாளர், உற்பத்தியாளர் அல்லது பொருத்தியிணைப்பவர் ஒருவர், அத்தகைய இறக்குமதியாளராக, விற்பனையாளராக, உற்பத்தியாளராக அல்லது பொருத்தியிணைப்பவராக அவரது தொழிலைக் கொண்டு நடாத்துகையில் அவரால் தொலைக்காட்சி வாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும்;

(இ) தொலைக்காட்சி வாங்கு கருவிகளைப் பழுதுபார்ப்பவரொருவர், அத்தகைய பழுதுபார்ப்பவராகத் தமது தொழிலைக் கொண்டுநடாத்துகையில், அவரால் தொலைக்காட்சி வாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும்;

(ஈ) ஆளெவரினாலும் தொலைக்காட்சி வாங்கு கருவியொன்று தொடர்பில் இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றை வைத்திருப்பவரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான அனுமதியுடன் அல்லது அவரது அறிவுறுத்தல்களின் பேரில் உரிமத்தில் குறித்துரைக்கப்பட்ட வளவுகளில் அக்கருவி பயன்படுத்தப்படுதலும்;

(உ) கூட்டுத்தாபனத்தில் அல்லது 28 ஆம் பிரிவின் கீழ் அமைச்சரால் வழங்கப்பட்ட உரிமம் ஒன்றின்கீழ் தாபிக்கப்பட்டுப் பேணப்படுவதான வேறு ஏதேனும் தனியார் தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையத்தில் ஊழியத்துக்கமர்த்தப்பட்ட எவரேனும் ஆளினால் அந்தக் கூட்டுத்தாபனத்தின் அல்லது நிலையத்தின் நோக்கங்களுக்காகத் தொலைக்காட்சி வாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும்;

(3) (அ) எந்த வகுதியினவான வளவுகளிலும் பல தொலைக்காட்சி வாங்கு கருவிகள் பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியம் உண்டென அமைச்சர் கருதுகின்றவிடத்து, அவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை

மூலம் இப்பிரிவின் ஏற்பாடுகள் அந்த வகுதியினவான வளவுகள் தொடர்பில் ஏற்புடையனவாதல் வேண்டும் என வெளிப்படுத்தலாம்.

(ஆ) எந்த வகுதியினவான வளவுகளுக்கு இப்பிரிவு ஏற்புடைத்தாகின்றதோ அந்த வகுதியொன்றில் உள்ளடக்கப்படும் எவையேனும் வளவுகளின் சொந்தக்காரர் அத்தகைய வளவுகளில் நிறுவப்படும் தொலைக்காட்சி வாங்கு கருவியொன்று தொடர்பிலும் ஓர் உரிமத்திற்கு விண்ணப்பிப்பதற்குப் பதிலாக இந்த வளவுகள் தொடர்பில் ஓர் உரிமத்திற்கு விண்ணப்பிக்கலாம். இவ்வுட்பிரிவின்கீழ் செய்யப்படும் விண்ணப்பம் ஒவ்வொன்றும் விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்க்கப்படல் வேண்டும். வெவ்வேறு வகுதியினவான வளவுகள் தொடர்பில், அந்த வகுதியினவான வளவுகளில் பயன்படுத்தப்படக்கூடிய சாத்தியம் கொண்ட தொலைக்காட்சி வாங்கு கருவிகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு வெவ்வேறு கட்டணங்கள் விதித்துரைக்கப்படலாம்.

(இ) பிரிவுகள் 16இ, 16ஈ, 16உ, 16ஊ என்பவற்றின் ஏற்பாடுகள், (2) ஆம் உட்பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமங்களை வழங்குதலுக்கும், புதுப்பித்தலுக்கும் ஆன விண்ணப்பத்திற்கும் அது தொடர்பாகவும், ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.

(ஈ) எவையேனும் வளவுகள் தொடர்பில் இப்பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்று வலுவிலிருக்கின்றவிடத்து, அத்தகைய வளவுகளில் எவரேனும் ஆளினால், தொலைக்காட்சி வாங்கு கருவியொன்று உடைமையில் வைத்திருக்கப்படுதலும் பயன்படுத்தப்படுதலும், 16இ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றின் அதிகாரத்தின் கீழானது எனக் கருதப்படுதல் வேண்டும்.

இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "உயர் கல்வி நிறுவனம்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இயைபான தேதிக்கு முன்னர் தொலைக் காட்சி வாங்கு கருவிகளை உடைமையில் வைத்திருந்து பயன்படுத்திய ஆட்களின் உரிமை.

16ஆ. பிரிவு 16அ என்பதிலுள்ள ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், இயைபான தேதிக்கு நேர்முன்னர் தொலைக்காட்சி வாங்கு கருவியொன்றைத் தனது உடைமையில் வைத்திருந்தவரான எவரேனும் ஆள், இயைபான தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்று மாத காலப்பகுதியொன்றிற்கு, அதற்கான உரிமமொன்றின்றி அத்தகைய தொலைக்காட்சி வாங்கு கருவியை உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் உரித்துடையவராதல் வேண்டும்.

உரிமமொன்றை வழங்குதல்.

16இ. (1) கூட்டுத்தாபனம் அல்லது எவரேனும் முகவர், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் விதித்துரைக்கப்படும் விபரங்களைக் கொண்டிருக்கின்றதாய் அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின்மேலும், அத்துடன் விதித்துரைக்கப்படும் கட்டணக் கொடுப்பனவின் மேலும், தொலைக்காட்சி வாங்கு கருவியொன்றை விண்ணப்பகாரர் உடைமையில் வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்கும் அதிகாரமளித்து, அத்தகைய தொலைக்காட்சி வாங்கு கருவி தொடர்பில் உரிமமொன்றை வழங்குதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின் கீழான ஏதேனும் தொலைக்காட்சி வாங்கு கருவி தொடர்பிலான உரிமமொன்றிற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், விதித்துரைக்கப்படும் படிவத்தில் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது எவரேனும் முகவருக்குச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன், விதித்துரைக்கப்படும் விபரங்களைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

(3) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொவ்வொன்றும்—

(அ) விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும்;

(ஆ) ஓராண்டு காலப்பகுதியொன்றுக்கு வலுவுடையதாயும்; அத்துடன்

(இ) உரிமத்தில் குறித்துரைக்கப்படும் காலப்பகுதி முடிவுற்ற பின்னர் புதுப்பிக்கப்படற்பாலதாயும்,

இருத்தல் வேண்டும்.

உரிமத்தின் நியதிகளும் நிபந்தனைகளும்.

16ஈ. இப்பாகத்தின் கீழ் ஏதேனும் தொலைக்காட்சி வாங்கு கருவி தொடர்பில் வழங்கப்படும் உரிமமொவ்வொன்றும், அவ்வுரிமத்தினது பயன்பாடு, கைமாற்றுகை என்பன தொடர்பாக விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

விண்ணப்பத்திலுள்ள விபரமாற்றமெதுவும் அறிவிக்கப்படல் வேண்டும்.

16உ. உரிமமொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும்; இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் ஓர் உரிமத்துக்கான அவரது விண்ணப்பத்திலுள்ள விபரங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்படுவதிலிருந்து முப்பது நாட்களுக்குள்ளாக, அத்தகைய மாற்றம் பற்றிக் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது எவரேனும் முகவருக்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

உரிமத்தைப் புதுப்பித்தல்.

16ஊ (1) கூட்டுத்தாபனம் அல்லது முகவர் எவரும், விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதற்கெனச் செய்யப்படும் விண்ணப்பத்தின் மேலும், அத்துடன் விதித்துரைக்கப்படும் கட்டணக் கொடுப்பனவின் மேலும் 16இ என்னும் பிரிவின்கீழ் வழங்கப்படும் உரிமமெதனையும் புதுப்பிக்கலாம்; அத்துடன் புதுப்பிக்கப்பட்டதான உரிமமானது, அதனகத்துக் குறித்துரைக்கப்படும் தேதியிலிருந்து ஓராண்டு காலப்பகுதிக்குச் செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

(2) இப்பாகத்தின்கீழ் உரிமமொன்றைப் புதிப்பிப்பதற்கான விண்ணப்பமொவ்வொன்றும், அதனகத்துக் குறித்துரைக்கப்படும் முடிவுறுதல் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் விதித்துரைக்கப்படும் படிவத்தில் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது எவரேனும் முகவருக்குச் செய்யப்படுதல் வேண்டும்.

கூட்டுத்தாபனம், அரசின் கட்டுப் பாட்டில் உள்ள ஏதேனும் ஒலிபரப்பு நிலையத்திற்கு உரிமக்கட்டணத் தின் ஒரு பாகத்தினைச் செலுத்துதல்.

16ள. பதின்மூன்றாம் பிரிவின் (1) உம் உட்பிரிவின் (ச) என்னும் பந்தியிற் குறிப்பிடு செய்யப்பட்ட பணத் தொகைகளைக் கூட்டுத்தாபன நிதியத்திற்குள் செலுத் தியபின்னர் எஞ்சியுள்ளவையும் தொலைக்காட்சி உரி மங்களை வழங்குவதற்கும் புதுப்பிப்பதற்குமாக ஒவ் வோர் ஆண்டிலும் பெற்றுக்கொள்ளப்படுபவையும் ஆன கட்டணங்களின் அத்தகைய பாகம், அரசுக்குரித்தாக் கப்பட்ட வேறேதேனும் தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலை யத்திற்குக் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டும்.

தொலைக்காட்சி வாங்கு கருவிக்கு உரிமமளிக்கப் படாமல் அத்தொலைக் காட்சி வாங்கு கருவியை உடை மையில் வைத் திருப்பதற்கும், அல்லது பயன்படுத்து வதற்கும் உரிமங்களின் நியதிகளையும் நிபந்தனை களையும், மீறுவதற்கு மான தண்டம்.

16ஏ. (1) (அ) இப்பாகத்தின் கீழ் வழங்கப்படும் அதற்கான உரிமமொன்றின்றி தொலைக்காட்சி வாங்கு கருவி யொன்றை உடைமையில் வைத் திருக்கின்றவரும் அல்லது பயன் படுத்துகின்றவரும், அல்லது

(ஆ) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் உரிமமொன்றின் ஏதேனும் நிய தியை அல்லது நிபந்தனையை மீறிச் செயலாற்றுகின்றவரும் அல் லது அதற்கு இணங்கியொழுகத் தவறுகின்றவரும்,

ஆன ஆளெவரும் இச்சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொரு வர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், இரண்டாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறுமாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கு இருவகை யிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) (1) ஆம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல் நீதிவானுனவர் அந்த உட்பிரிவின்கீழ் அவர் விதிக் கக்கூடிய ஏதேனும் தண்டனையுடன் சேர்த்து—

(அ) எந்தத் தொலைக்காட்சி வாங்குகருவி சம்பந்த மாக தவறு புரியப்படுகின்றதோ அந்தத் தொலைக்காட்சி வாங்கு கருவி தொடர்பில்,

இப்பாகத்தின்கீழ் ஏதேனும் உரிமம் வழங்கப் பட்டிருப்பின், அந்த உரிமம் இல்லாதாக்கப் படுதல் வேண்டும் எனவும்; அத்துடன்

(ஆ) எந்தத் தொலைக்காட்சி வாங்கு கருவி சம்பந்தமாக தவறு புரியப்படுகின்றதோ அல்லது அத் தவறு புரியப்படுவதில் அல்லது புரியப்படுவது சம்பந்தமாக எந்தத் தொலைக்காட்சி வாங்குகருவி பயன்படுத்தப்பட்டதோ அந்தத் தொலைக்காட்சி வாங்குகருவி அரசுக்கு இழப்பிக்கப்படுதல் வேண்டும் எனவும்

கட்டளையிடலாம்.

(3) இரண்டாம் உட்பிரிவின்கீழ் இழப்பிக்கப்பட்ட ஏதேனும் தொலைக்காட்சி வாங்கு கருவி எதுவும் அத்தகைய இழப்பின்மேல் முற்று முழுதாக அரசுக்கு உரித்தாக்கப்படுதல் வேண்டும். அத்தகைய உரித்தாக்கல்—

(அ) எந்தக் காலப்பகுதிக்குள் நீதிவானின் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மேன்முறையீடொன்று செய்யப்படக் கூடுமோ அந்தக்காலப்பகுதி முடிவுற்றதன் பின்னர்; அல்லது

(ஆ) நீதிவானின் கட்டளைக்கெதிராக மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு ஒரு மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளவிடத்து, இழப்புக் கட்டளையை உறுதிப்படுத்தி அல்லது சரியென ஏற்றுக்கொண்டு அத்தகைய மேன்முறையீடு தீர்மானிக்கப்படுவதன்மேல்,

பயனுடையதாதல் வேண்டும்.

உரிமக் கட்டணம் செலுத்தப்படாத விடத்தான மிகைக் கட்டணம்.

16ஈ. எவரேனும் ஆள், 16இ என்னும் பிரிவின் கீழ் வழங்கப்படும் உரிமமொன்றைப் புதுப்பிப்பதற்காக அத்தகைய உரிமத்தில் குறித்துரைக்கப்படும் முடிவுறுதல் தேதிக்குப்பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு அல்லது ஒரு முகவருக்கு விண்ணப்பிக்கின்றவிடத்து, விதித்துரைக்கப்படும் வீதத்திலான மிகைக் கட்டணக் கொடுப்பனவு விண்ணப்பகாரரினால் செலுத்தப்படுவதற்கு அமைவாக, கூட்டுத்தாபனம் அல்லது அந்தகைய முகவர் அத்தகைய உரிமத்தைப் புதுப்பிக்கலாம். எவ்வாறாயினும், அவ்வாறு விதித்துரைக்கப்படும் ஆகக் கூடிய வீதமானது, அத்தகைய உரிமத்தைப் புதுப்பிப்பதற்கென அவ்வாறு செலுத்தப்படற்பாலதான கட்டணத்தில் பத்து நூற்றுவீதத்தை விஞ்சுதலாகாது.

பதிவுச்சான்றிதழின்றி, தொலைக்காட்சி வாங்கு கருவிகளை இறக்குமதிசெய்தல், விற்பனை செய்தல் முதலியனவான தொழில்களைக்கொண்டு நடாத்துவதன் மீதான தடை.

16ஓ. (1) இயைபான தேதியன்று அல்லது அதற்குப்பின்னர், ஆளெவரும், கூட்டுத்தாபனத்தால் அதற்கென வழங்கப்படும் பதிவுச்சான்றிதழொன்றின் அதிகாரத்தின்கீழ் தவிர, தொலைக்காட்சி வாங்குகருவி எதனையும் இறக்குமதி செய்தல், விற்பனைசெய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலைக்கொண்டு நடாத்துதலாகாது.

(2) ஓராம் உட்பிரிவின் தேவைப்பாடுகள், 28 ஆம் பிரிவின்கீழ் தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையம் ஒன்றினைத் தாபிப்பதற்கும் பேணுவதற்குமென உரிமம் ஒன்று வழங்கப்பட்டவரான ஆளினால் தொலைக்காட்சி வாங்குகருவி ஒன்று இறக்குமதி செய்யப்படுவதற்கு, விற்பனை செய்யப்படுவதற்கு, உற்பத்தி செய்யப்படுவதற்கு அல்லது பொருத்தியிணைக்கப்படுவதற்கு ஏற்புடையனவாதலாகாது.

இயைபான தேதிக்கு முன்னர் தொழில் நடாத்தியவர்களான ஆட்கள்.

16ஔ. பிரிவு 16ஓ என்பதன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், எந்த ஆள் இயைபான தேதிக்கு நேர்முன்னர் ஏதேனும் தொலைக்காட்சி வாங்கு கருவியை இறக்குமதிசெய்தல், விற்பனைசெய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்தியுள்ளாரோ அந்த ஆள், இயைபான தேதியிலிருந்து தொடங்குகின்ற மூன்று மாத காலப் பகுதியொன்றுக்கு இப்பாகத்தின்கீழான பதிவுச்சான்றிதழின்றி அத்தகைய தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு உரித்துடையவராதல் வேண்டும்.

தொலைக்காட்சி வாங்கு கருவிகளை இறக்குமதிசெய்தல் முதலியனவான தொழில்களைக் கொண்டு நடாத்தும் ஆட்களைப் பதிவுசெய்தல்.

16க. கூட்டுத்தாபனமானது—

(அ) எந்தத் தொழில் சம்பந்தமாக விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழில் தொடர்பாக (149 ஆம் அத்தியாயமான) வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின் கீழ் வழங்கப்படுவதான பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சேர்த்து விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் அதற்கென விண்ணப்பம் செய்யப்படுவதன்மேலும்,

(ஆ) விதித்துரைக்கப்படும் கட்டணம் செலுத்தப்படுவதன்மேலும்,

எவரேனுமாளைக் கூட்டுத்தாபனத்துடன் பதிவுசெய்து கொள்ளவேண்டும்; அத்துடன் தொலைக்காட்சி வாங்கு கருவிகளை இறக்குமதிசெய்தல் விற்பனைசெய்தல், உற்பத்திசெய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழில்களுள் எந்தத் தொழில் சம்பந்தமாக விண்ணப்

பம் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு அதிகாரமளிக்கின்றதான பதிவுச் சான்றிதழொன்றை அத்தகைய ஆளுக்கு வழங்குதல் வேண்டும்.

பதிவு செய்வதற்கான விண்ணப்பம்.

16ஞ. இப்பாகத்தின்கீழ் பதிவுசெய்வதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், எந்தத் தொழில் சம்பந்தமாக விண்ணப்பம் செய்யப்படுகின்றதோ அந்தத் தொழில் தொடர்பாக (149 ஆம் அத்தியாயமான) வியாபாரப் பெயர்கள் கட்டளைச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுவதான பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் சேர்த்து, விதித்துரைக்கப்பட்ட விபரங்கள் அடங்கியுள்ளதாக, விதித்துரைக்கப்படக் கூடியவாறான அத்தகைய படிவத்தில் கூட்டுத்தாபனத்திற்குச் செய்யப்படுதல் வேண்டும்.

பதிவுச்சான்றிதழின் நியதிகளும் நிபந்தனைகளும்.

16ஞ. இப்பாகத்தின்கீழ் வழங்கப்படும் பதிவுச்சான்றிதழொவ்வொன்றும், இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைந்ததாக இருத்தல் வேண்டும்.

ஒரு பதிவுச் சான்றிதழின்றி தொலைக்காட்சி வாங்குகருவிகளை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் முதலியனவான தொழில்களைக் கொண்டு நடாத்துவதற்கும் பதிவுச் சான்றிதழின் நியதி நிபந்தனைகளை மீறுவதற்குமான தண்டம்.

16ட. (1) எந்த ஆள்—

(அ) அதற்கென வழங்கப்படும் பதிவுச் சான்றிதழொன்றின்றி தொலைக்காட்சி வாங்கு கருவிகளை இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், உற்பத்தி செய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்றாரோ ; அல்லது

(ஆ) இப்பாகத்தின்கீழ் வழங்கப்படுவதுமான பதிவுச் சான்றிதழொன்றின் நியதிகளையும் நிபந்தனைகளையும் மீறிச் செயலாற்றுகின்றாரோ, அல்லது அவற்றோடு இணங்கியொழுகத் தவறுகின்றாரோ,

அந்த ஆளெவரும் தவறொன்றுக்கு குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்கமுறை விளக்கத்தின்பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல், ஏழாயிரத்து ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது பதினெட்டு மாதங்களை விஞ்சாதவொரு காலத்திற்கான மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான ஏதேனும் தவறுக்காக எவரேனும் ஆளுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மேல், நீதிவானுனவர், அந்த உட்பிரிவின்கீழ் அவர் விதிக்கக்கூடிய தண்டனையுடன் சேர்த்து மேலதிகமாக, தவறின் பாரதூரமான தன்மையை கருத்திற்கொண்டு

(அ) எந்தப் பதிவுச் சான்றிதழ் சம்பந்தமாகத் தவறு புரியப்படுகின்றதோ அந்தப் பதிவுச் சான்றிதழை, கட்டளையில் குறித்துரைக்கப்பட வேண்டிய காலப்பகுதியொன்றிற்கு இடைநிறுத்துகின்றதான; அல்லது

(ஆ) அத்தகைய பதிவுச் சான்றிதழை இல்லாதாக்குகின்றதான,

கட்டளையை ஆக்கலாம்.

கூட்டிணைக்கப் பட்ட அல்லது கூட்டிணைக்கப் படாத குழுக்களினால் புரியப்படும் தவறுகள் தொடர்பாக குறித்த சில ஆட்களுக்குள்ள பொறுப்பு.

16ண. இப்பாகத்தின் கீழான தவறொன்று ஆட்கள் குழுவொன்றினால் புரியப்படுமிடத்து, அப்பொழுது—

(அ) அந்த ஆட்கள் குழு கூட்டிணைக்கப்பட்ட ஒரு குழுவாயின் தவறு புரியப்பட்ட நேரத்தில் அந்தக் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் பணிப்பாளரொருவராக, பொது முகாமையாளராக, செயலாளராக அல்லது இவர்களையொத்த வேறு அலுவலராகவிருந்த ஆளொவ்வொருவரும்; அல்லது

(ஆ) அந்த ஆட்கள் குழு ஒரு குழுமமாயின்; தவறு புரியப்பட்ட நேரத்தில் அந்தக் குழுமத்தின் பங்காளரொருவராகவிருந்த ஆளொவ்வொருவரும்

அத்தவறு தமது அறிவின்றி அல்லது உடந்தையின்றிப் புரியப்பட்டது எனவும், எல்லாச் சூழ்நிலைகளிலும் தமது பணிகளின் தன்மையைக் கருத்திற்கொண்டு, அத்தவறு புரியப்படுவதைத் தடுப்பதற்குத் தாம் பிரயோகித்திருக்கவேண்டிய அத்தகைய எல்லா விழிப்புக் கவனத்தையும் தாம் பிரயோகித்தார் எனவும் எண்பித்தாலன்றி, அத்தவறுக்குக் குற்றவாளியாகக் கருதப்படுதல் வேண்டும்".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 31அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 21அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:—

"நீதிவான் தேடுதல் எழுத்தாணைகளை வழங்குதல்.

21அ. (1) நீதிவானொருவர், சத்தியத்தின் மீதான தகவல் பெறப்பட்டதன் மூலம் இச்சட்டத்தின் ஏற்பாடுகளை மீறி எந்த ஆளுக்கு எதிராக தகவல் கொடுக்கப்பட்டுள்ளதோ அந்த ஆள்—

(அ) ஏதேனும் தொலைக்காட்சி வாங்குகருவியை உடைமையில் வைத்திருக்கிறாரெனவும் பயன்படுத்துகின்றாரெனவும்;

(ஆ) தொலைக்காட்சி வாங்குகருவிகளை இறக்குமதி செய்தல், விற்பனைசெய்தல், உற்பத்திசெய்தல் அல்லது பொருத்தியிணைத்தல் என்ற தொழிலைக் கொண்டு நடாத்துகின்றாரெனவும்,

நம்புவதற்கு நியாயமான ஏது இருக்கின்றதெனத் திருப்திப்படுமிடத்து, அத்தகைய நீதிவான், கூட்டுத்தாபனத்தின் எவரேனும் அலுவலருக்கு, அத்தகைய வளவுகளுக்குள் பிரவேசித்து அங்கு காணப்படும் ஆளெவரிடமிருந்தும் விசாரணைகளைச் செய்வதற்கும் எந்தத் தொலைக்காட்சி வாங்குகருவி சம்பந்தமாக அத்தகைய மீறுகை புரியப்படுகின்றதோ அந்தத் தொலைக்காட்சி வாங்குகருவியெதனையும் கைப்பற்றுவதற்கும் தேடுதல் எழுத்தாணையொன்றை வழங்கலாம்.

(2) கூட்டுத்தாபனத்தின் அலுவலரொருவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஏதேனும் தொலைக்காட்சி வாங்குகருவியைக் கைப்பற்றும்போது, எந்த நீதிவான் நீதிமன்றத்தின் நியாயாதிக்கத்திற்குள் அந்தத் தொலைக்காட்சி வாங்கு கருவி கைப்பற்றப்படுகின்றதோ, அந்த நீதிவான் நீதிமன்றத்தின் முன்னர் அத்தகைய தொலைக்காட்சி வாங்கு கருவியை கைப்பற்றும் திகதியில் இருந்து ஏழு நாட்களுக்குள் காண்பித்தல் வேண்டும்; அத்துடன் அந்தத் தொலைக்காட்சி வாங்கு கருவி காண்பிக்கப்பட்டதன்மேல், நீதிமன்றமானது, அந்தத் தொலைக்காட்சி வாங்குகருவியின் கட்டுக்காப்புத் தொடர்பாக அது தகுதியெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கட்டளையை ஆக்குதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.**

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவானது, "ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வேறுவகையில் வெளிப்படையாக ஏற்பாடு செய்யப்பட்டாலன்றி, ஐந்நூறு ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றிற்கு ஆளாதல் வேண்டும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 30அ என்னும் பிரிவை உட்புகுத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன், இது அச் சட்டவாக்கத்தின் 30அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :—

" அறவிடப் படும்போது குற்றப்பணத் தின் மூன்றி லிரண்டு பங்கு கூட்டுத்தாபன நிதியத்திற்கு வரவு வைக்கப் படுதல் வேண்டும்.

30அ. இச்சட்டத்தின்கீழான தவறு எதற்காகவும் நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் எல்லாக் குற்றப்பணங் களினதும் மூன்றிலிரண்டு பங்கு, அறவிடப்படும்போது, கூட்டுத்தாபனத்தின் நிதியத்திற்கு வரவு வைக்கப்படு தல் வேண்டும். ".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) " விதித்துரைக்கப்பட்ட " என்பதன் வரைவிலக்கணத்திற்கு நேர் முன்னர் பின்வரும் புதிய வரைவிலக்கணங்களை உட்புகுத்துவதன்மூலம் :—

இச்சட்டத்தின் IVஅ என்னும் பாகத்தின்கீழான உரிமம் தொடர்பான எந்தச் சந்தர்ப்பத்திலும் " முகவர் " என்பது, இச் சட்டத்தின் 8அ என்னும் பிரிவின்கீழ் அத்தகைய முகவராக இருக்கவென கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்படும் எவரேனும் ஆள் அல்லது கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழு என்று பொருள்படும் ;

" வளவுகள் " என்பது, ஏதேனும் கட்டடத்துடன் அல்லது கட்டடத்தின் பாகத்துடன் இணைந்ததாயுள்ள காணியுடன் சேர்ந்த ஏதேனும் கட்டடம் அல்லது கட்டடமொன்றின் பாகம் என்று பொருள்படும் ;

(2) " தனியார் தொலைக்காட்சி ஒலிபரப்பு நிலையம் " என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக் கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

" இயைபான தேதி " என்பது, எந்தத் தேதியன்று இச்சட்டத்தின் IVஅ என்னும் பாகம் நடைமுறைக்குக் கொண்டுவரப் படுகின்றதோ அந்தத் தேதி என்று பொருள்படும் ;

(3) " தொலைக்காட்சி நிகழ்ச்சி அல்லது நிகழ்ச்சிகள் " என்பதன் வரைவிலக்கணத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை உட்புகுத்துவதன் மூலம் :—

" தொலைக்காட்சி வாங்குகருவி " என்பது, அனுப்பப்பட்டு சீராக்கப்பட்ட வானொலி அதிர்வு சைகைகளை வாங்குவதற்கும் ஒரு சீராக்கப்பட்ட கட்புலச் சாயல்களையும் ஒலிகளையும் ஆக்குவதற்கும் பயன்படுத்தப்படும் ஒரு சாதனம் எனப் பொருள்படும்.

தொலைத் தொடர்புக் கட்டளைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடையனவாகாமை.

**11.** இயைபான தேதியிலிருந்தும் அதற்குப் பின்னரும், உரிமங்கள் தொடர்பான தொலைத் தொடர்புக் கட்டளைச்சட்டத்தின் ஏற்பாடுகள், தொலைக்காட்சி வாங்குகருவிகளை இறக்குமதிசெய்தல், விற்பனைசெய்தல், உற்பத்திசெய்தல், பொருத்தியிணைத்தல், உடைமையில் வைத்திருத்தல் அல்லது பயன்படுத்துதல் என்பனவற்றிற்கு அல்லது அது தொடர்பாக ஏற்புடையனவாதலாகாது.

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய அட்டவணையைச் சேர்த்தல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் அட்டவணை இத்தால் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது :—

"அட்டவணை

(பிரிவு 16ஞ)

பிரிவு 16ஞ என்பதன்கீழ் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழின் நியதிகளும் நிபந்தனைகளும்.

1. பதிவுச் சான்றிதழ் கைமாற்றப்படற்பாலதாதலாகாது.

2. பதிவுச் சான்றிதழானது எந்தத் தொழிலிடம் தொடர்பானதோ அந்தத் தொழிலிடத்தில் துலாம்பரமானவோரிடத்தில் வெளிக்காட்டி வைக்கப்படுதல் வேண்டும்.

3. பதிவுச் சான்றிதழை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், விதித்துரைக்கப் படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் இடாப்பொன்றை வைத்திருந்து பேணுதல் வேண்டுமென்பதுடன், அவரது தொழிலின் ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல் தொடர்பான விபரங்களையும் அதனகத்துப் பதிவிடு செய்தலும் அல்லது பதிவிடு செய்வித்தலும் வேண்டும்.

4. அவ்வாறு வைத்திருந்து பேணப்படும் அத்தகைய இடாப்பு ஒவ்வொன்றும், கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் தலைமையதிபதியால் அதற்கென அதிகார மளிக்கப்பட்ட எவரேனும் அலுவலரால் சோதனைக்குக் கிடைக்கத்தக்கதாக இருத்தல் வேண்டும்.

5. (1) பதிவுச் சான்றிதழொன்றை வைத்திருப்பவர் ஒவ்வொருவரும், கூட்டுத் தாபனத்தால் அவ்வாறு செய்யுமாறு கேட்கப்படும்போது, அவரது தொழில் தொடர்பிலான அத்தகைய விபரத்திரட்டை அல்லது வேறு தகவலைக் கூட்டுத் தாபனத்திற்குக் கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) முற்போந்த பந்தியின்கீழ் கொடுத்துதவப்படும் விபரத்திரட்டு ஒவ்வொன்றும், அதனகத்துக் கூறப்பட்ட விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என்ற பயன்படுவதான வெளிப்படுத்துகையொன்றினால் சரிபார்க்கப்படுதல் வேண்டும்.

6. பதிவுச்சான்றிதழை வைத்திருப்பவரொவ்வொருவரும், அவரது பதிவுக்கான விண்ணப்பத்தில் கூறப்பட்ட விபரங்களில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டதிலிருந்து முப்பது நாட்களுக்குள் அத்தகைய மாற்றம் பற்றிக் கூட்டுத்தாபனத்திற்கு எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

7. பதிவுச்சான்றிதழை வைத்திருப்பவரொவ்வொருவரும், எந்த ஆளுடன் அல்லது எந்த ஆள் சார்பில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றதோ அந்த ஆளுக்குப் பின்வருவனவற்றைக் குறிப்பிடுவதான ஒரு பற்றுச்சீட்டை அதன் மீதான அவரது கையொப்பத்துடன் வழங்குதல் வேண்டும் :—

(அ) அந்த ஆளின் பெயரும், வளவுகளின் விவரணமும் முகவரியும், அத்துடன் எந்த வாகனத்தில் அத்தகைய தொலைக்காட்சி வாங்குகருவி வைத்திருக்கப்படவுள்ளதோ அந்த வாகனத்தின் வகையும் பதிவு இலக்கமும் ;

(ஆ) கொடுக்கல் வாங்கலின் தன்மை ;

(இ) எந்தத் தொலைக்காட்சி வாங்குகருவி அல்லது கருவிகள் தொடர்பில் அத்தகைய கொடுக்கல் வாங்கல் செய்யப்படுகின்றதோ அந்தத் தொலைக் காட்சி வாங்குகருவியின் அல்லது கருவிகளின் வகையும் இலக்கமும் ;

(ஈ) கொடுக்கல் வாங்கலின் தேதி ;

அத்துடன் அவர் அத்தகைய பற்றுச்சீட்டு ஒவ்வொன்றினதும் பிரதியொன்றை வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன், கோரப்பட்டதன்மேல் கூட்டுத்தாபனத் தின் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அல்லது அதற்கென அவரால் அதிகார மளிக்கப்படும் எவரேனும் ஆளுக்கு அதனைக் காண்பித்தலும் வேண்டும்.".